264	மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்	1,280,890,000.00	1,274,055,787.91	77,729,000.00	77,667,992.09	1,358,619,000.00	1,351,723,780.00	99.49
284	வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்	-	-	425,257.00	386,095.00	425,257.00	386,095.00	90.79
286	காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்	2,507,400.00	2,340,240.05	-	-	2,507,400.00	2,340,240.05	93.33
290	கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்	-	-	159,000.00	-	159,000.00	-	0.00
307	மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	4,280,000.00	3,825,693.33	1,727,000.00	1,652,340.19	6,007,000.00	5,478,033.52	91.19
326	நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட தீர்திருத்த அமைச்சு	22,500.00	22,500.00	-	-	22,500.00	22,500.00	100.00
327	காணி உபயோகக் கொள்கை திட்டமிடல் திணைக்களம்	778,500.00	617,758.42	2,428,825.00	2,357,328.88	3,207,325.00	2,975,087.30	92.76
328	மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம்	909,150.75	901,672.31	1,240,160.00	1,222,816.37	2,149,310.75	2,124,488.68	98.85
334	பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்	45,328,874.61	44,845,279.74	-	-	45,328,874.61	44,845,279.74	98.93
401	தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு	-	-	134,730.00	134,730.00	134,730.00	134,730.00	100.00
402	கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு ராஜாங்க அமைச்சு	-	-	4,720,417.00	2,894,433.64	4,720,417.00	2,894,433.64	61.32
403	மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, கல்விச்சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு	201,502,390.00	185,107,330.10	10,391,650.00	8,568,339.97	211,894,040.00	193,675,670.07	91.40
407	பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதபரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு ராஜாங்க அமைச்சு	-	-	4,000,000.00	1,058,305.60	4,000,000.00	1,058,305.60	26.46


408	பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	1,569,767.46	1,384,291.66	41,250,956.29	30,126,228.82	42,820,723.75	31,510,520.48	73.59
409	உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு	423,392,135.91	418,843,009.77	45,236,989.26	34,240,677.97	468,629,125.17	453,083,687.74	96.68
412	வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	29,089,800.00	27,636,160.86	708,000.00	702,000.00	29,797,800.00	28,338,160.86	95.10
414	சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	427,170,554.00	421,899,474.41	463,934,735.38	275,168,008.09	891,105,289.38	697,067,482.50	78.23
415	கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	8,783,000.00	6,235,686.73	2,163,565,395.59	1,335,643,744.33	2,172,348,395.59	1,341,879,431.06	61.77
416	சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு	5,523,970.00	5,356,001.32	-	-	5,523,970.00	5,356,001.32	96.96
417	தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு	-	-	470,000.00	470,000.00	470,000.00	470,000.00	100.00
421	திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு	706,200.00	544,144.89	4,027,000.00	2,462,680.13	4,733,200.00	3,006,825.02	63.53
425	நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை	3,475,500.00	3,116,386.00	96,611,602.73	83,589,132.03	100,087,102.73	86,705,518.03	86.63

	மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சு							
426	உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துதுக இராஜாங்க அமைச்சு	50,000.00	-	-	-	50,000.00	-	0.00
430	காணி அமைச்சு			23,100.00	20,902.20	23,100.00	20,902.20	90.49
434	கப்பற் சரக்கு களஞ்சிய வசதிகள், முனைய மேடைகள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பற்துறை கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான இராஜாங்க அமைச்சு	-	-	2,428,744.71	2,428,744.71	2,428,744.71	2,428,744.71	100.00
மொத்தம்		**3,676,071,988.42**	**3,603,125,121.82**	**3,119,885,834.61**	**2,018,927,500.60**	**6,795,957,823.03**	**5,622,052,622.42**	**82.73**

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2021 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	31.12.2021 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	1,263,783,107.80	1,263,783,107.80
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	610,895,233.94	610,895,233.94
9153	காணி	332,710,000.00	332,710,000.00
9160	நடைபெறும் பணிகள்	79,426,920.35	79,426,920.35

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. JAF/A/DSJ/02/21

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 06 ஜூன் 2022

FINANCIAL MANAGEMENT DIVISION
06 JUN 2022
DISTRICT SECRETARIAT, JAFFNA

மாவட்டச் செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்கூறப்பட்ட அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நி. பீ. எம். குமணநாயக்க
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

பிரதிகள் :
1. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.
2. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. / My No. JAF/A/DSJ/02/21
உமது இல. / Your No.
திகதி / Date 06 ஜூன் 2022

மாவட்டச் செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்திக்கான தொடர்பு	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
1.5 (ஆ)	காரைநகர் பிரதேச செயலகத்தின் காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அதன் பெறுமதி ரூபா 2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இக்காணியில் அலுவலக கட்டடமானது ரூபா 58.14 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு 30 யூன் 2020 வரை எதுவித நடவடக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தனியார் காணியை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.1.1(அ)	2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 50 சிறு கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் யாழ்கோ நிறுவனத்தின் யோகட் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ரூபா 1,336,300 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமான Batch Pasteurizer ஒரு வருட காலத்திற்கு மேலாக பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது.	குறித்த இயந்திரத்தினை திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
3.1.2	வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியின் கீழ் கடற்றொழில் செய்யும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூபா 5,661,763.51 பெறுமதியான 1152 வலைகள் வழங்கப்பட்டபோதிலும் இவற்றில் ரூபா 690,849.35 பெறுமதியான 152 வலைகள் 03 ஆண்டுகளாக பொது மக்களுக்கு வழங்கப்படாது பிரதேச செயலகத்தில் காணப்படுவதனால் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.	உரிய பயனாளிகளுக்கு உரிய காலப்பகுதியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
3.1.3 (அ)	2020 ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (சப்ரிகமக்) கீழ் 03 பிரதேச செயலகங்களால் கூட்டுமொத்தம் ரூபா 11,249,000 தொகை செலவிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 06 எண்ணிக்கையான செயற்திட்டங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படாதிருந்தது. இது தொடர்பில் காலதாமத தண்ட அறவீடு கூட்டுமொத்தம் ரூபா 667,920 ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காலதாமத தண்ட அறவீடு ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.1.3 (ஆ)	சமூகவலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்த்தின் கீழ் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் கூட்டுமொத்தம் ரூபா 2,091,709 தொகை செலவிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட 02 எண்ணிக்கையான செயற்திட்டங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படாதிருந்தது. இது தொடர்பில் காலதாமத தண்ட அறவீடு கூட்டுமொத்தம் ரூபா 191,391 ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காலதாமத தண்ட அறவீடு ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
3.2.1(ஆ)(iii)	ஒப்பந்தத்தின் பிரகாரம் முழுமையாக வேலை நிறைவேற்றப்படாமைக்கான தண்ட அறவீடு ரூபா 1,169,074 மாவட்டச் செயலகத்தினால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவில் கழிவீடு செய்யப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் ரூபா 1,169,074 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.	தண்ட அறவீடு ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
3.2.1(ஆ)(iv)	குறித்த செயற்திட்டத்திற்கான கட்டுநிதி முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த செயற்திட்டம் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டிருக்காமை திட்டத்தின் நோக்கம் நாளதுவரை அடையப்பெற்றிருக்கவில்லை.	குறித்த செயற்திட்டத்தினை நிறைவுபடுத்தி உரிய நோக்கம் அடையப்பெற வேண்டும்.
3.4	வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் அலுவலக கட்டடமானது ரூபா 56,023,874 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் பெறுமதி நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப் பட்டிருக்காததுடன் காணியின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு 31 மார்ச் 2021 வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	காணி உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5	மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணைப்பணம் வைப்பிலிடப்பட வேண்டிய 04 பிரதேச செயலகங்களின் 04 எண்ணிக்கையான உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் வைப்பிலிடப்பட்டிருக்காமையாலும் குறைவாக வைக்கப்பட்டிருந்தமையாலும் அவர்களது தவறுகளால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடுசெய்யக்கூடிய வகையில் முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட செயலாளர் தவறியிருந்தார்.	நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணைபணம் வைப்புச்செய்யாத உத்தியோகத்தரினால் வைப்புச்செய்யப்பட வேண்டும்.
3.6(அ)	2020 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட Covid-19 தொற்று நோய் அசாதாரண சூழ்நிலை காரணமாக தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைதடி கிழக்கு (J/289) கிராம அலுவலர் பிரிவில் ரூபா 5,000 வீதம் 56 பயணாளிகளுக்கான கொடுப்பனவு தொடர்பில் இடம்பெற்ற நிதி மோசடி ரூபா 280,000 தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மோசடி இடம்பெற்ற அரச நிதியினை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	உரிய விசாரணைகள் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு மோசடியான நிதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

வருமானங்களின் பெறுவனவு

மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் மாவட்ட செயலகத்திற்குரித்தானதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான இல்லங்கள் மற்றும் விடுதிகள் என்பவற்றிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்த வாடகை வருமானம் கூட்டுமொத்தம் ரூபா 280,438 வருமானமாக நிதிச்செயலாற்றுகைக்கூற்றில் (ACA – F) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

நிதியல்லாத சொத்துக்கள

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா 223,210,000 என மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் ரூபா 145,588,833 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 77,621,167 ஆல் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான பின்வரும் 06 வகையான நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் நிதிநிலைமைக்கூற்றில் (ACF–P) வெளிப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) யாழ்ப்பாண மாவட்ட பயிற்சி நிலையம்
(ii) வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் CHA கட்டடம்
(iii) வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் கிராமிய செயலக அலுவலகம்
(iv) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஆண்கள் விடுதி
(v) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பெண்கள் விடுதி
(vi) 11 எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள்

(இ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் (ACF–P) காணப்பட்ட நிதி அல்லாச்சொத்துக்களின் மீதி ரூபா 2,163,544,125 ஆக காணப்பட்டபோதிலும் 2021 ஜனவரி 1 ஆந் திகதி திறைசேரியின் அச்சுப்பதிப்பின் (SA 82) சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,108,472,832.75 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 55,071,292.25 வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) 4 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான ரூபா 256,500 கிரயமான 09 மோட்டார் சைக்கிள்கள் ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச்சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளமையால் நிதியல்லாச் சொத்துகளின் பெறுமதி ரூபா 256,500 ஆல் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான ரூபா 2,600,000 பெறுமதியான வாகனம் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்காமையால் சொத்தின் பெறுமதி ரூபா 2,600,000 ஆல் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் நிதிசெயலாற்றுகைக்கூற்றில் (ACA–F) மூலதனச் சொத்துக்களின் கொள்வனவாக ரூபா 55,492,166 காண்பிக்கப்பட்டிருந்தபோதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின் SA82 இல் ரூபா 109,637,515.82 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 55,145,349.92 வேறுபாடு காணப்பட்டது.

(எ) மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலிற்கு ரூபா 20,099,503 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் நிதியல்லாச்சொத்தில் குறித்த செலவினம் உள்ளடக்கப்படாமையினால் நிதியல்லாச்சொத்துக்கள் குறித்த பெறுமதியால் நிதிநிலைமைக்கூற்றில் (ACA-P) குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக காணியின் பெறுமதி ரூபா 13,200,000 மீளாய்வாண்டு நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தபோதிலும் காணியின் உரிமையினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் சில பதிவேடுகள் உரிய பிரமாணங்களின் படி பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.

இல.	பதிவேடுகளின் வகை	உரிய பிரமாணங்கள்	அவதானிப்புக்கள்
1.	பிணைகள் பதிவேடு	நிதிப்பிரமாணம் 891(1)	மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
2.	மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு	நிதிப்பிரமாணம் 454(2)	கடந்த 08 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
3.	பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு	நிதிப்பிரமாணம் 214	மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
4.	கேள்வி கோரல் பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி	கடந்த 09 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
5.	பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப்பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி	கடந்த 09 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
6.	நட்டப்பதிவேடு	நிதிப்பிரமாணம் 110	மீளாய்வாண்டில் தொகைகள், நட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
7.	நிலையான சொத்துப்பதிவேடு	நிதிப்பிரமாணம் 502(2)	நாளதுவரை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
8.	உத்தியோகபூர்வ தொலைபேசிப்பதிவேடு	நிதிப்பிரமாணம் 845(1)	நாளதுவரை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் செலவினங்களின் 08 செலவு விடயங்களில் 09 சதவீதம் தொடக்கம் 60 சதவீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 12,710,000 தொகை மூல ஒதுக்கீட்டிலிருந்து வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்கு மூல ஒதுக்கீட்டின் 06 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் என்ற வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 12,710,000 தொகை வேறு செலவின விடயங்களிலிருந்து மூல ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மீண்டெழும் செலவினங்களின் மூல ஒதுக்கீடுகளின் 12 செலவின விடயங்களில் 14 சதவீதம் தொடக்கம் 60 சதவீதம் என்ற வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 20,799,373.81 வகைமாற்றம் செய்யப்பட்டமைக்கான திருப்திகரமான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

2.2.1 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மீண்டெழும் செலவினத்தில் 11 சந்தர்ப்பங்களில் 03 செலவினத்தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 11,055,479 தொகை 12 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலதனச் செலவினத்தில் 16 சந்தர்ப்பங்களில் 4 செலவினத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 1,057,379,483 பெறுமதியான செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது.

2.2.2 மீண்டுவரும் செலவினம்

19 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அந் நிதியேற்பாட்டிலிருந்து 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 24,858,753 சேமிக்கப்பட்டிருந்தது.

2.2.3 மூலதன செலவினம்

18 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மூலதன செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அந் நிதியேற்பாட்டிலிருந்து 06 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 1,100,699,732.89 சேமிக்கப்பட்டிருந்தது.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இல.	சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை
1)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு நிதிப் பிரமாணங்கள்		
	(i) இலக்கம் 104(4)	667,271.00	02 பிரதேச செயலகங்களின் விபத்து மற்றும்களவு தொடர்பான முழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii) இலக்கம் 206	2,037,026.00	ஒரு பிரதேச செயலகத்தினால் வைப்பில் இருந்து கொடுப்பனவு செய்வதற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் இரு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
	(iii) இலக்கம் 386(5)	16,382,753.81	02 பிரதேச செயலகங்களில் 2021 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த காசோலைகள் காசோலையில் கையொப்பம் இடப்படும் 1ஆம், 2ஆம் நபர்களினால் கையொப்பம் இடப்பட்டிருக்காது காணப்பட்டது.
	(iv) இலக்கம் 571	8,543,865.24	02 வருடங்கள கடந்த நிலையில் 14 பிடிபண வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2)	உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 08/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை	210,000.00	ஒரு பிரதேச செயலகத்தில் உபசரணைச் செலவு மாதாந்த படியாக சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டிருந்தது.

2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 02 பிரதேச செயலகங்களில் ரூபா 2,916,452.56 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகாரம் வழங்கப்படும் அலுவலரினால் அங்கீகரிப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையானது நிதிப்பிரமாணம் 137 இற்கு மாறான விடயமாகும்.

(ஆ) 03 பிரதேச செயலகங்களில் ரூபா 4,625,338 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையானது நிதிப்பிரமாணம் 138 மற்றும் 257 இற்கு மாறான விடயமாகும்.

(இ) மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் பொருட்கள் சேவைகள் பெற்றுக்கொள்ள முன்னர் 2020 ஆம் ஆண்டு 64 காசோலைகள் கூட்டுமொத்தம் ரூபா 119,543,789.93 தொகைக்கு வரையப்பட்டு அலுவலகத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தமையானது நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இற்கு மாறான விடயமாகும்.

(ஈ) 07 பிரதேச செயலகங்களில் உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அத்தாட்சி பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாது உறுதிச்சீட்டுக்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ரூபா 33,723,077.07 தொகைக்கு காசோலைகள் வரையப்பட்டிருந்தமையானது நிதிப்பிரமாணம் இலக்கம் 137, 138, 139, 237அ(i) இற்கு மாறான விடயமாகும்.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டு நெறியின் மேலதிக இணைப்பு 35 இன் பிரகாரம் வாங்குதல் முறைமையின் அடிப்படையில் பிராந்திய பெறுகைக்குழுவிற்கு ரூபா ஒரு மில்லியன் வரை உச்ச எல்லை காணப்பட்டிருந்தும் 06 பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 35,924,074 பெறுமதிக்கு இவ் எல்லையை கருத்திற் கொள்ளாமல் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தமை அதிகாரமளிக்கப்படாத பெறுகை நடவடிக்கையாக காணப்பட்டிருந்தது.

2.5 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள்

i) மாவட்டச் செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த ஒய்வுபெற்ற மற்றும் இறந்த அலுவலர்களின் கூட்டுமொத்தம் ரூபா 574,859 பெறுமதியானவற்றை தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் 04 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்கள் வரை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii) மீளாய்வாண்டின் நிதி செயலாற்றுகைக்கூற்று (ACA-F) மற்றும் முற்பண கணக்கு கூற்று (ACA – 5) ஆகியவற்றுக்கிடையில் ரூபா 5,032,037 வேறுபாடு காணப்பட்டது.

2.6 வைப்புக்கள்

(அ) 02 பிரதேச செயலகங்களினால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 407,980 தொகை 06 மாதங்களுக்கு மேலாக உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் தற்காலிக வைப்புக் கணக்கில் தேக்கிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகங்களில் செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 23,728,618.37 06 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்களாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன.

(இ) மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் பிடிபண வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,543,767.92 தொகை 02 வருடங்களிற்கு மேலாக நிதிப்பிரமாணம் 571 இற்கு அமைவாக நடவடிக்ககை எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் பேணப்பட்டு வருகின்றன.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

(அ) 2020 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகத்தினால் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (சப்ரி கமக்) கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார பயிற்சி நிலைய கட்டட நிர்மாணவேலைத்திட்டத்திற்காக ரூபா 1,980,000 செலவினம் செய்யப்பட்டிருந்தபோதிலும் நாளதுவரை குறித்த வேலைத்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் குறித்த செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டு ரூபா 1,441,500 பெறுமதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்திரபுரம் தேங்காய் எண்ணை உற்பத்தி செயற்திட்டம் தொடர்பில் 06 வகையான பொருட்கள் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் சந்திரபுரம் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டிருக்காதிருந்தது.

(இ) சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி மூலம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பில் சௌபாக்கியா உற்பத்தி கிராமிய வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 7,164,996.57 பெறுமதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பனை வெல்லத் தொழிற்சாலைக்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காதிருந்தது.

(ஈ) 2018 ஆண்டுக்கானவரவு செலவுத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுத்துறையினை அபிவிருத்தி செய்தல் வேலைத்திடடத்தின் கீழ் நீர்வேலி வாழைக்காய் சிப்ஸ் தயாரித்தல் செயற்திட்டமானது ரூபா 10,325,421 செலவு செய்யப்பட்டு 30.06.2020 ஆந் திகதி நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர், விற்பனை கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டு 21 மாதங்கள் கடந்த நிலையில் குறித்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமலும் பராமரிப்புகள் அற்ற நிலையிலும் காணப்பட்டதுடன் வலிகாமம் கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர், விற்பனைக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினரால் உற்பத்திச்செலவு அதிகமாக காணப்படுவதனால் மேற்படி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட இயந்திரங்கள் உற்பத்திக்கு பொருத்தமற்றதென உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் குறித்த

செயற்திட்டம் வெற்றியளிக்கக்கூடிய வகையில் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் நாளதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.1.2 செயற்திட்டத்தை பூர்த்திசெய்யாமல் கைவிடுதல்

(அ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 56,640,750.06 பெறுமதியான பால் பதனிடும் செயற்திட்டத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் கட்டட நிர்மாணம் ஆகிய இரண்டு வேலைத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் நாளதுவரை குறித்த வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வழிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் மாவட்டச் செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட 02 எண்ணிக்கையான செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் அவற்றுக்கான 02 எண்ணிக்கையான செயற்பாட்டு பிணைமுறிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,822,238 அரச வருமானமாக மாற்றப்பட வேண்டியிருந்தும் 08 மாதங்களுக்கு மேலாக மாற்றப்பட்டிருக்காமையால் அரச வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) (ஆ) இல் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்கான ரூபா 4,822,238 பெறுமதியான செயற்பாட்டு பிணைமுறியின் (Performance bond) மூலப்பிரதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

3.2 உள்நாட்டு நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

ஒப்பந்த நிர்வாகம்

சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராமி வேலைத்திட்டத்தின் கீழ் சைவப்பிரகாச பாடசாலை வீதி புனரமைப்பு மற்றும் செல்லப்பிள்ளையார் கோயில்

வீதி புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆண்டு பெறுகை வழிகாட்டு நெறியின் 5.4.8(அ) இன் பிரகாரம் ரூபா 290,366 பெறுமதியான செயல் நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு (Performance bond) பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

3.3 பெறுகைகள்

(அ) பெறுகை வழிகாட்டி நெறியின் பிரிவு 8.9 இன் பிரகாரம் ரூபா 500,000 மேற்பட்ட பண்டங்கள் சேவைகளுக்கான பெறுகை நடவடிக்கையின் போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 பிரதேச செயலகங்களினால் ரூபா 8,432,824 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டு நெறியின் 3.6 இன் பிரகாரம் மீள் கட்டளைகள் முறைமையில் பொருட்கள் கொள்வனவு செய்வதாயின் பெறுகை குழுவின் தீர்மானத்துடன் தொடக்க ஒப்பந்த பெறுமதியின் 50 சதவீதம் வரையில் கொள்வனவு செய்ய வரையறுக்கப்பட்டிருந்தபோதிலும் 07 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகை சந்தர்ப்பங்களில் இந் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்காது 60 தொக்கம் 24700 சதவீதம் வரை மீள் கட்டளையில் ரூபா 30,201,478.39 பெறுமதியான பொருட்கள் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 02 பிரதேச செயலகங்களினால் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது ரூபா 1,672,462.50 பெறுமதியான 05 வகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 02 பிரதேச செயலகங்களில் பெறுகை நடைமுறையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக ரூபா 12,600 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் பிரதேச செயலகங்களினால் கோரப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் குறைந்த விலையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்காது அதேவகையான பொருட்களுக்கு மாவட்டச் செயலகத்தினால் கோரப்பட்ட கூறுவிலையின்

பிரகாரம் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 1,763,627.21 அரச நிதி சிக்கனமற்ற முறையில் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) மாவட்டச் செயலகத்தினால் Robin EY – 20 வகையான நீர் இறைக்கும் இயந்திரம் கொள்வனவு தொடர்பில் இரண்டு முறை பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டு இரண்டு விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 724,293 அரச நிதி சிக்கனமற்ற முறையில் மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருந்தது.

(எ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை கைந்நூலின் பிரிவு 4.1 மற்றும் 4.4 இன் பிரகாரம் ஒரே விதமான பெறுகை பிரிக்கப்படாமல் ஒரே தடவையில் இடம்பெற வேண்டியிருந்தும் நியாயமான காரணங்களின்றி 2 பிரதேச செயலகங்களினால் 3 தொடக்கம் 5 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ரூபா 8,207,258.74 பெறுமதியான செயற்திட்டங்களுக்கு பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு

மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணைப்பணம் வைப்பிலிடப்பட வேண்டிய பிரதேச செயலகம் ஒன்றில் உத்தியோகத்தர் ஒருவரால் பிணைப்பணம் வைப்பிலிடப்பட்டிருக்காமையால் அவர்களது தவறுகளால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடுசெய்யக்கூடிய வகையில் முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட செயலாளர் தவறியிருந்தார்.

3.5 நட்டங்களும் சேதங்களும்

மாவட்ட செயலகம் மற்றும் ஒரு பிரதேச செயலகத்தின் ரூபா 2,663,709 பெறுமதியான 02 எண்ணிக்கையான வாகனங்கள் மற்றும் ஒரு மடிக்கணனி ஆகியவற்றின் நட்டங்கள் தொடர்பில் நிதிக்கூற்று மற்றும் இழப்பு பதிவேடு ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

04 பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 05 எண்ணிக்கையான கணக்காய்வு ஐயவினாக்களுக்கு நாளதுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

06 பிரதேச செயலகங்களில் கொடுப்பனவிற்காக வரையப்பட்ட காசோலைகள் கொடுப்பனவு உத்தியோகத்தரால் கொடுப்பனவிற்கு உரிய நபரிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்தும் உரிய நபர்களுக்கு காசோலைகள் கையளிக்கப்படாது காசோலை விநியோக பதிவேட்டில் விடயத்திற்கு பொறுப்பான அலுவலர்களினால் சிற்றொப்பம் இடப்பட்டு காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

4 மனிதவள முகாமைத்துவம்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நான்கு நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1456 ஆக காணப்பட்டிருந்தபோதிலும் உள்ளபடியான பதவியணியினர் 1753 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 188 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 485 மிகையாளணியினரை தேவையான இடங்களுக்கு மாற்றுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ரி. பி. எம். குமணநாயக்க
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

4. செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச்சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)

கட்டிடம் மற்றும் கட்டமைப்பு புனரமைப்பும் மேம்படுத்தலும்

தலைப்பு 264	நிகழ்ச்சித்திட்டம் : 1	கருத்திட்டம் : 1	உப செயற்றிட்டம் : 0		விடயம் : 2001	
தொடர் இல	வேலைத் திட்டத்தின் பெயர்	பிரிவு	ஒதுக்கீடு	செலவு	அடைவு சதவீதம்	
					நிதி	பௌதீக
01	சைக்கிள் கொட்டகை மேம்படுத்தல். மின் இணைப்பு திருத்தம். பயிற்சி நிலையத்தில் தளவோடுகள் புனர் நிர்மானம் மற்றும் சுவரில் அலுமாரி பொருத்துதல்.	மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.	2,063,030.13	2,063,030.13	100	100
02	3 phase Line விநியோகத்திற்கான மின் இணைப்பு.	பிரதேச செயலகம் தெல்லிப்பழை	1,010,894.10	1,010,894.10	100	100
03	மின் இணைப்பு வேலைகளை மேம்படுத்தல்	பிரதே சசெயலகம் நெடுந்தீவு	70,000.00	70,000.00	100	100
04	இயந்திர அறையை மேம்படுத்தல். சைக்கிள் கொட்டகை மேம்படுத்தல். உள் வீதி புனர்நிர்மாணம்.	பிரதேச செயலகம் காரைநகர்	1,210,805.95	1,210,805.95	100	100
05	கோவைகள் இறாக்கைகளை அமைத்தல்	பிரதேச செயலகம் பருத்தித்துறை	273,754.75	273,754.75	100	100
06	சைக்கிள் கொட்டகையை மேம்படுத்தல்	பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்	569,106.81	569,106.81	100	100
07	நிலையான அலுமாரியைப் பொருத்துதல்.	பிரதேச செயலகம் உடுவில்	130,000.00	130,000.00	100	100
08	மாநாட்டு மண்டப தளவோடுகளின் புனர்நிர்மாணம்.	பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை	101,975.36	101,873.08	100	100
09	சிண்றாண்டிச்சாலை மற்றும் கணக்குகிளை புனர்நிர்மானம் மற்றும் உள் வீதிகளை மேம்படுத்தல்.	பிரதேச செயலகம் கரவெட்டி	2,056,432.90	2,056,432.90	100	100
10	ஆவண காப்பகம் புனர்நிர்மானம் மற்றும் மின்விசிறிகளை பொருத்துதல்.	பிரதேச செயலகம் வேலணை	404,000.00	404,000.00	100	100
11	வாகனக்கொட்டகை நுழைவாயில் சரிவு மேம்படுத்தல் மற்றும் பிரதேச செயலாளர் விடுதியின் எல்லைச்சுவர் மேம்படுத்தல்.	பிரதேச செயலகம் மருதங்கேணி	2,910,000.00	2,910,000.00	100	100
மொத்தம்			**10,800,000.00**	**10,799,897.72**	**100**	**100**

பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும்						
தலைப்பு 264	நிகழ்ச்சித்திட்டம் : 1	கருத்திட்டம் : 1	உப செயற்றிட்டம் : 0		விடயம் : 2002	
தொடர் இல	வேலைத் திட்டத்தின் பெயர்	பிரிவு	ஒதுக்கீடு	செலவு	அடைவு சதவீதம்	
					நிதி	பௌதீக
01	சிசிடிவி கமரா, இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் கணினி வலையமைப்பினை மேம்படுத்தல்.	மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.	950,000.00	949,605.00	100	100
02	சிசிடிவி கமரா இணைப்பு மற்றும் கணினி வலைப்பின்னல் வேலைகள்	பிரதேச செயலகம் சங்கானை	501,000.00	501,000.00	100	100
03	கேள்வி கோரல் பெட்டி	பிரதேச செயலகம் தெல்லிப்பழை	16,000.00	16,000.00	100	100
04	உள்ளக வலையமைப்பு வேலைகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்த வேலைகள்	பிரதேச செயலகம் உடுவில்	260,000.00	260,000.00	100	100
05	கணினி வலையமைப்பு வேலைகள்	பிரதேச செயலகம் மருதங்கேணி	200,000.00	200,000.00	100	100
06	WIFI இணைப்பை மேம்படுத்தல் மற்றும் உபகரணங்கள் திருத்துகை.	பிரதேச செயலகம் கரவெட்டி	299,130.00	299,130.00	100	100
07	கணினி வலையமைப்பு வேலைகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்த வேலைகள்	பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்	460,580.00	460,580.00	100	100
08	LGN இணைப்பு மேம்படுத்தல்.	பிரதேச செயலகம் காரைநகர்	120,000.00	120,000.00	100	100
09	உள்ளக வலையமைப்பு வேலைகள்	பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை	43,290.00	43,290.00	100	100
10	கணினி திருத்தம்	பிரதேச செயலகம் வேலணை	100,000.00	100,000.00	100	100
11	கணினி வலையமைப்பு வேலைகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்த வேலைகள்	பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்	350,000.00	350,000.00	100	100
மொத்தம்			3,300,000.00	3,299,605.00	100	100

வாகனங்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும்

தலைப்பு 264	நிகழ்ச்சித்திட்டம் : 1	கருத்திட்டம் : 1	உப செயற்றிட்டம் : 0		விடயம் : 2003	
தொடர் இல	வேலைத் திட்டத்தின் பெயர்	பிரிவு	ஒதுக்கீடு	செலவு	அடைவு சதவீதம்	
					நிதி	பௌதீக
01	ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கான வாகன உதிரிப்பாகங்களை பழுதுபார்த்தல் மற்றும் மாற்றுதல்.	மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.	2,852,493.58	2,852,493.58	100	100
02	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் சாவகச்சேரி	445,293.32	445,293.32	100	100
03	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்	547,531.64	547,531.64	100	100
04	குழாம் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனத்தின் பிரதான திருத்தம்	பிரதேச செயலகம் காரைநகர்	982,074.27	982,074.27	100	100
05	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் கரவெட்டி	266,190.00	266,190.00	100	100
06	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் கோப்பாய்	150,000.00	150,000.00	100	100
07	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் மருதங்கேணி	309,798.89	309,798.89	100	100
08	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் பருத்தித்துறை	114,282.61	114,282.61	100	100
09	வாகனம் திருத்தம்	பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்	332,335.69	332,335.69	100	100
மொத்தம்			**6,000,000.00**	**6,000,000.00**	**100**	**100**

தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு

தலைப்பு 264	நிகழ்ச்சித்திட்டம் : 1	கருத்திட்டம் : 1	உப செயற்றிட்டம் : 0		விடயம் : 2102	
தொடர் இல	வேலைத் திட்டத்தின் பெயர்	பிரிவு	ஒதுக்கீடு	செலவு	அடைவு சதவீதம்	
					நிதி	பௌதீக
01	கணினிகள் - 36 அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்.	மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள்	8,837,340.90	8,828,944.97	100	100
02	வரவேற்பு மேசை	பிரதேசசெயலகம்காரை நகர்	38,880.00	38,880.00	100	100
03	தளபாடங்கள்	பிரதேச செயலகம் நல்லூர்	500,000.00	500,000.00	100	100
04	மேசைகள் கதிரைகள் அலுமாரிகள் மற்றும் சாப்பாட்டு மேசை	பிரதேச செயலகம் உடுவில்	600,715.80	600,715.80	100	100
05	மாநாட்டு மண்டபத்திற்குரிய கதிரைகள் - 50	பிரதேச செயலகம் சங்கானை	298,200.00	298,200.00	100	100

06	குஷன் கதிரைகள் மற்றும் போட்டோ பிரதியெடுக்கும் இயந்திரம்	பிரதேச செயலகம் தெல்லிப்ப	530,725.00	530,725.00	100	100
